

முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு மாநில மாவட்ட கழக வர்த்தக அணி சார்பில் பொன்னேரியில் மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருச்சி சிவா எம்.பி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். உடன் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, மு.பகலவன், ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், வெ.அன்புவாணன் ஜி.ஸ்டாலின், ஏ.கே சுரேஷ், எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட கழகத்தில், வன்னியபுரத்தில் பகுதி அமைப்பாளர் வி.எம்.சங்கர் கணேஷ் ஏற்பாட்டில் மயிலை மேற்குப் பகுதி வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் சார்பில் பள்ளிக் குழந்தைகளுக்கு பள்ளி உபகரணப் பொருட்களையும் – வெங்கட்ராமன் தெருவில் வட்ட துணை செயலாளர் தேனை பி.பார்த்திபன் ஏற்பாட்டில், பொது மக்களுக்கு காலை அறுசுவை உணவுகளையும் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். வட்ட கழக செயலாளர் மு.ஏழுமலை தலைமையில், மேற்கு பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி., எஸ்.முரளி ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# சென்னை மேற்கு மாவட்டம் நடத்தும் தொடர் 72 பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



**இன்று (19–03–2025 – புதன்கிழமை)**
**நடைபெறும் பொதுக் கூட்டங்கள் விபரம் வருமாறு:**

| வ. எண் | வட்டம் / அணி | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மாணவர் அணி ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி | வெ. அஸ்வின் குமார் பகுதி அமைப்பாளர் | காமராஜபுரம் 110அ வட்டம் | பசும்பொன் ரவிச்சந்திரன் தலைமைக்கழக பேச்சாளர் ராஜராஜேஸ்வரி இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு/பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி/வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### 4 ஆண்டுகளில் 6 புதிய வழித்தடங்களில் பேருந்து வசதி ஏற்படுத்தியதற்கு நன்றி!

# கும்மிடிப்பூண்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைத்திடுவீர்!

## பேரவையில் – டி.ஜெ.கோவிந்தராஜன் கோரிக்கை!

*சென்னை, மார்ச்.19-*

சட்டப்பேரவையில் கும்மு டிப்பூண்டி தொகுதி உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் கேட்ட கேள்வியும் அதற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதில் வருமாறு :-

**டி.ஜெ.கோவிந்தராஜன்:** கும்மிடிப்பூண்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், எண் 62, பெத்திக்குப்பம் கிராமத்தில் புல எண்.173/3 மற்றும் 173/4ல், 1.90.5 ஹெக்டேர்ஸ் நிலம் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாநகர போக்குவரத்துக் கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது, கும்மிடிப்பூண்டியில் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை மாநகர போக்குவரத்துக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**டி.ஜெ.கோவிந்தராஜன்:** திட்ட மதிப்பீடு செய்யச் சொல்லியிருக்கக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆந்திர எல்லையோரம் அமைந்திருக்கக்கூடிய தொகுதி, கும்மிடிப்பூண்டி தொகுதி. அந்த பகுதியிலே பல்வேறு கிராமங்கள் போக்குவரத்து வசதிகளைப் பெற்றிருந்தாலும், மேலும் போக்குவரத்து வசதியை விரிவுபடுத்துவதற்காக அங்கே பணிமனை அமைத்துக்கொடுத்தால் பல்வேறு பகுதிகளுக்கு போக்குவரத்து வசதியினைப் பெருக்கிட ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, பணிமனையினை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு அந்த நிலம் மேய்க்கால் புறம்போக்கு நிலம் ஆகும். அதை மாநகர போக்குவரத்துக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. அதற்கான தொகையாக 4 கோடியே 9 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் நிர்ணயம் செய்



யப்பட்டது. ஆனால், மாநகர போக்குவரத்துக் கழகத்தில் போதிய நிதியாதாரம் இல்லாததால், மேற்படி நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 50 சதவிகிதம் குறைத்து நிர்ணயம் செய்து தரும்படி அரசிடம் கோரி, அதனடிப்படையில், நிலத்திற்கான தொகை 2 கோடியே 4 இலட்சத்து 92 ஆயிரம் என நிர்ணயம் செய்யப்பட்டு, அந்நிலம் மாநகர போக்குவரத்துக் கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நில உரிமை மாற்றம் செய்த பிறகு, அதற்கான கட்டுமானப் பணிகள் குறித்த விரிவான திட்ட அறிக்கை மாநகர போக்குவரத்துக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. எனவே, விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டி.ஜெ.கோவிந்தராஜன்:** இந்த 4 ஆண்டுகாலத்தில் 6 புதிய வழித்தடங்களில் பேருந்து வசதி, ஆரணியிலிருந்து கும்மிடிப்பூண்டிக்கு 5 பேருந்துகள் 40 முறை வந்து, 40 முறை செல்லக்கூடிய அளவிற்கு வசதியினை ஏற்படுத்தியது, கும்மிடிப்பூண்டி பகுதியிலிருந்து தாழ்தள பேருந்துகள் சென்னைக்கு சென்று வருவதற்கு வசதி செய்தது, குளிர்சாதன பேருந்துகள் வழங்கியமை ஆகியவற்றிற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கும்மிடிப்பூண்டி, மாதர்பாக்கம், பெண்ணலூர்பேட்டை, ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து நேரடியாக கிளாம்பாக்கம் செல்வதற்கு போக்குவரத்து வசதியினை பெருக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, போந்தவாக்கம், திருநிலை, கண்ணன் கோட்டை, மாலந்தூர் போன்ற பகுதிகளுக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய வழித்தடங்களை நீட்டித்துத் தருமாறும் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** முதலமைச்சர் அவர்கள், புதிய பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டு, அதனடிப்படையில் தற்போது சுமார் 3,000 பேருந்துகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. புதிய பேருந்துகள் வந்த பிறகு, ஆங்காங்கே வழித்தட நீட்டிப்பிற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. எந்த வழித்தடம் குறிப்பாக தேவையென்று உறுப்பினர் அவர்கள் எழுத்துபூர்வமாகத் தந்தால், அதுகுறித்து துறை ரீதியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அவருடைய தொகுதியிலிருந்து, கிளாம்பாக்கத்திற்கு நேரடி இணைப்பு வேண்டுமென்று பல்வேறு ஊர்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அவற்றையும் எழுத்துபூர்வமாகத் தந்தால், எந்தெந்தப் பேருந்துகளை நீட்டித்து, அவற்றை இணைக்க முடியும் என்பதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

